# தொலைந்து போகும் எண்ணங்கள்....



எம்.வை.இமாம்தீன்

# தொலைந்து போகும் எண்ணங்கள்

(கவிதைத் தொகுப்பு)


**கவிஞர் எம்.வை.இமாம்தீன்**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி



**வெளியீடு:**

**தமிழ் மன்றம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**

ஆசிரியர் : கவிஞர் எம்.வை.இமாம்தீன்

பதிப்பு : மார்ச் 2008

பக்கம் : xii + 24

பிரதி : 400

வடிவமைப்பு : க.ரணேஷ்


அச்சுப்பதிப்பு : மல்ரிவிஷன் அச்சுகலையகம்

உரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : தமிழ் மன்றம்(வ.தே.க.க)

தொடர்புகளுக்கு: எம்.வை.இமார்தீன்
637,அரபாநகர், தம்பலகாமம்.

விலை : 70/=



எனக்குப் பல
அர்ப்பணங்கள்
செய்த
அன்னைக்கும்
தந்தைக்கும்
சமர்ப்பணம் இது.



## நூலாசிரியர் பற்றிய சில குறிப்புகள்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய பயிற்சி நெறியினை மேற்கொள்ளும் மாணவ ஆசிரியன் எம்.வை.இமாம்தீன் தனது ஆரம்பக் கல்வியினை தி.அல்ஹிக்மா முஸ்லிம் வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை தி.அல்ஹிஜ்ரா முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றுக் கொண்டவர்.

கவிஞன் பிறப்பதில்லை அவன் உருவாக்கப்படுகின்றான் என்னும் கூற்றினை நிஜமாக்கும் வகையில் புதியவற்றை புதுமையாகச் சிந்திக்கும் எம்.வை.இமாம்தீன் தனது நுட்பமான கற்பனா சக்தியின் காரணமாகவும், தனது வாழ்க்கையில் ஏற்பட்ட சில மறக்க முடியாத சம்பவங்களுக்கு உருக்கொடுக்கும் வகையிலும் இக்கவிதை தொகுப்பினை வெளியிடுகின்றார்.

இந் நூலாசிரியரின் பிற தகமைகளை பார்க்கின்ற போது விளையாட்டுத் துறையில் மிகவும் ஈடுபாடு உடையவர், கோட்ட, வலய, மாவட்ட நிலைகளில் பல சான்றிதழ்களை பெற்றிருக்கிறார். அத்துடன் ஆங்கிலத்துறையில் டிப்ளோமா பயிற்சி நெறியினை நிறைவு செய்தவர். அவர் இளமையாக காணப்பட்டாலும் கூட ஒரு வயது முதிர்ந்த அனுபவம் வாய்ந்தவர் போன்று இவரின் செயற்பாடுகள் அனைத்தும் காணப்படுகின்றன. அத்துடன் இவரின் சில கவிதைகள் வானொலியில் ஒலிபரப்பாகி பல பாராட்டுக்களை இந் நூலாசிரியர் பெற்றுள்ளார்.

இவர் தனது இளமைக் காலத்தில் சமூகத்தில் பல பதவிகளை வகித்துள்ளார். அந்த வகையில் கிராம அபிவிருத்தி, பாடசாலை அபிவிருத்தி, சனசமூக நிலைய செயலாளராக பதவி வகித்து பல சாதனைகளை அதில் நிகழ்த்தியுள்ளார். அதுமட்டுமல்ல இவர்

திருகோணமலை மாவட்ட தம்பலகாம கிளையில் உள்ள மக்கள் வங்கியில் காசாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவ்வாறு பல திறமைகளையும் பொறுப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ள நூலாசிரியர் எம்.வை.இமாம்தீன் வெளியிட்டுள்ள இக்கவிதைத் தொகுப்பானது நிச்சயம் பாடசாலை ஆசிரியர், மாணவர், அனைவரும் பயன்பெறக்கூடிய வகையில் உருவாக்கம் பெற்றுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

என்னோடு பழகிப்பண்பட்ட அன்பு நண்பன் இமாம் எந்தவோர் நேரத்திலும் ஏதாவதோர் புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருப்பதையே அவரது வழக்கமாகக் கொண்டவர். இவர் எனக்கு மட்டுமல்ல பலபேருக்கும் முன்மாதிரியாக விளங்குபவர். இவரோடு இருக்கும் எனதுகல்லூரிக் காலம் பெரும் மகிழ்ச்சியை தந்தாலும் அது முற்றுப் பெற்று விடுமோ? என்ற அச்சமும் உள்ளே உருண்டு கொண்டுதான் இருக்கின்றது.

கவிஞர் எம்.வை.இமாம்தீன் அவர்கள் மேலும் இத்துறையில் வளர்ந்து உயர்வு பெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

கெ.யோசப்கிரிசேந்திரா
தமிழ மன்றத்தலைவர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா.



## பீடாதிபதியின் வாழ்த்துக்கள்

மிக நீண்டகாலத்தின் பின் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் மாணவ ஆசிரியன் ''இமாம்'' வெளியிடுகின்ற கவிதைத் தொகுப்புக் குறித்து எனது அளவிலா மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலில் ஆசிரியன் ஒரு படைப்பாளியாக இருக்கின்றான். நல்ல இலக்கியவாதியாக, இலக்கியவாதிகளைப் படைப்பவனாக இருக்கின்றான். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு விதமான ஆற்றல்களை இறைவன் கொடுத்திருக்கின்றான். அத்தகைய கொடைகளை நாங்கள் சரிவர பயன்படுத்த வேண்டும். கவிதை படைக்கும் ஆற்றல் இமாமுக்கு இறைவன் அளித்த கொடை அவர் அதனை வெளிப்படுத்த எமது கல்வியியற் கல்லூரியை ஒரு களமாகப் பயன்படுத்த எடுத்திருக்கும் முயற்சியானது பாராட்டுக்குரியதும் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியானதும், வாய்ப்பைச் சரிவர பயன்படுத்த எடுத்துக்கொள்ளும் முயற்சியுமாகும்.

பல்லாயிரக்கணக்கான சொற்களாலும், நூற்றுக்கணக்கான வரிகளாலும் சொல்லமுடியாத பல விடயங்களை கவிஞன் ஒரு சில வரிகளில் தெளிவாக ஆழமாக சொல்லிமுடித்து விடுகின்றான். அதன் இரசனையும் தனித்துவமான கவிதைகள் வாசிப்பவனை இரசித்து வாசிக்கத் தூண்டுகின்றது. அந்த வகையில் இமாம் தனது கவிதை வரிகளிலும் கையாண்டிருப்பது கவனிப்புக்குரியதும் பராட்டுக்குரியதுமாகும். உதாரணமாக சில வரிகள்

அறியாமை

மூக்கில்லாத
உனக்கு
கழுதையிடம் ஏன்
கற்பூர வாசனை பற்றிய
கலந்துரையாடல்

எவ்வளவு ஆழமான வரிகள் வாசிப்பவன் தனது அனுபவத்துக்கேற்ப கருத்துக்களை அடுக்கிப்பார்க்கத் தூண்டும் வரிகள், ஒருவனுக்கு ஒருவிதமாக கருதவைக்கும் வரிகள், இதுதான் கவிதைக்குணம் இதுதான் கவிஞன் செயல்.

எமது மாணவர்கள் பல்வேறு ஆற்றல்களைக் கொண்டவர்கள் என்பதற்கு இமாம் ஒரு குறிகாட்டியாகும்.

பாராட்டுக்களும், வாழ்த்துக்களும்.

க.பேர்ணாட்

பீடாதிபதி

தேசிய கல்வியியற் கல்லூரி

வவுனியா.



## தமிழ் மன்றப் போஷகரின் வாழ்த்துச்செய்தி
## பதச்சோறு

உணர்வுக்கும் தமிழுக்கும் செழுமை சேர்ப்பது கவிதை இதனைக் கலைகளின் அரசி என்பர் அறிஞர். சங்ககாலம் முதல் இன்றுவரை மாறா இளமையுடனும் துடிப்புடனும் திரியும் பருவமங்கை கவிதை இந்தப் பருவ மங்கை இளைஞர்களை மிகவும் கவர்ந்து நிற்பதால் ''இமாம்'' என்ற இளைஞனும் இவளில் இலயித்து ஈர்க்கப்பட்டிருக்கிறார்.

சுமார் 2010 வருடங்களுக்கு மேற்பட்ட கவிதைப் பாரம்பரியத்தை உடையவர்கள் நாங்கள், ஏனைய ஆக்க இலக்கியங்களான சிறுகதை, நாவல், குறுநாவல் போன்றன அந்நிய தேசத்து இலக்கியங்களின் பண்புகளைப் பெற்றதனால் வந்து சேர்ந்தன. கவிதை மட்டுமே சங்க காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் கவிதையில் கனதியான, காத்திரமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

விமர்சகர்கள் குறிப்பிடுவது போல் வெறும் சொல்லடுக்குக் கவிதைகள் காலவோட்டத்தில் மறைந்து போக காட்சியும், கருத்தும், கவிநயமும், சொல்லழகும், கவிதை லயமும் மிக்க கவிதைகள் காலத்தால் அழிவதில்லை.

இமாமின் 'தொலைந்து போகும் எண்ணங்கள்' என்ற கவிதைத் தொகுதியிலுள்ள கவிதைகள் தொலைந்த போகாதன என்று கூறமுடியும்.

மிளிரும் வெறும் குறியீடுகளில் வார்த்தைகளையும் கருத்துக்களையும் புதைத்து இருண்மைக் கவிதைகள் எழுதும் புதியவர்கள் ஒருபுறம், பிரகடனங்களை கவிதைகள் என்று ஓம்புபவர்கள் இன்னொரு புறமாக சமகால உலக மாயையுள் கவிதை கிடக்கின்றது எனவும் விமர்சகர்கள் குறிப்பிடும் நிலையில்

இமாமின் 'தொலைந்து போகும் எண்ணங்கள்' என்ற இத் தொகுதியின் கவிதைகள் சற்று வித்தியாசமாக தெரிகின்றன.

திரும்பி வருவீர் - என்ற
நம்பிக்கை
குடியிருக்கின்றன - வீடுகளில்
குழந்தைகளின் தவிப்பிற்காக....

என்று கூறும் போது சமகால யதார்த்தம் உணர்த்தப்படுகின்றது.

புதிய புதிய உரை வீச்சுக்களாக கவிதை வரிகள் பிறக்கின்றன.

''மனித உயிர்களை குடிக்கும்
உதிரவுண்ணிகள் நீங்கள் தானா?
அறியாமையின் அறிஞர்களே!
உடலிலுள்ள கிளைகள்
ஒவ்வொன்றும்
கிளைமோரால் தாக்கப்பட்டு
சிதைக்கப்படுவதற்கு
சந்தையில் வாங்கப்பட்ட
கைப் பொம்மைகளா? அவர்கள்.

என்று கேட்குமிடத்தில் கவிஞருக்குரிய தார்மீக கோபத்தை வாசகனும் உணர்ந்து கொள்கிறான். உணர்வதோடு நின்றுவிடாமல் தானும் அக்கேள்வியைக் கேட்க உந்தப்படுகிறான்.

இமாமின் கவிதைகளுள் 'தொலைந்து போகும் எண்ணங்கள்' கவிதையை பதச்சோறாக எடுத்து பார்க்குமிடத்து கவித்துவம், உணர்வு நலம், மொழிச் சிறப்பு என நம்பிக்கையூட்டும் கவிஞனாக மிளிரக் கூடிய சாயல் தெரிகிறது. இனிவரும் காலங்களில் அனுபவமும், வாசிப்பும், தேடலும் அதிகரிக்க, மேலும் சிறந்த கவிதைகளை தரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

ந.பார்த்தீபன்
தமிழ் மன்ற போஷகர்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா.



## இஸ்லாமிய மன்றப் போஷகரின் வாழ்த்துச்செய்தி

ஒருமனிதன் வாழும் சூழல், அதனூடே அவன் பெறும் அனுபவங்களே அவனைத் தீர்மானிக்கின்றன. அவ்வகையில் கவிஞர்கள் பிறப்பதில்லை. அவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள் என்ற வாசகத்திற்கு அமைவாகவும், ஓர் ஆசிரியராக பயிற்சி பெற வந்து ஒரு கவிஞராக 'தொலைந்து போகும் எண்ணங்கள்' மூலம் தன்னை அறிமுகப்படுத்துகின்றார். எம்.வை.இமாம்தீன், அவர்கள்.

மனிதன் தன்னுடைய அனைத்து உணர்வுகளையும் வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத போது, அதனை இலக்கியத்தினூடாக வார்த்தைகளை எழுத்துக்களில் வடிக்கின்றான். அதனூடே தான் சொல்லவரும் விடயங்களை, நூல் வாயிலாகவோ, பத்திரிகை வாயிலாகவோ வெளியிடும் போது, ஆத்ம திருப்தியடைகின்றான். அப்படியாக உணர்வுகளை வடித்திருக்கும் கவிஞரின் இக்கன்னி முயற்சியை மனமார வாழ்த்துவதோடு, தொடர்ந்தும் இவரின் இவ்வாறான முயற்சிகள் பிறந்து, புகழ் பெற்ற கவிஞர்களுள் ஒருவராகவும், உலகம் போற்றக்கூடியவராகவும் திகழ வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இஸ்லாமிய மன்றப் போஷகர் என்ற வகையில், மேலும் இவரது முயற்சியைப் பாராட்டுவதுடன் இதற்கு உதவிய வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றத்தினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜனாப் S.சஹாப்தீன்<br>
இஸ்லாமிய மன்ற போஷகர்<br>
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி<br>
வவுனியா.



## முன்னுரை

## இதயத்திலிருந்து உதிரத்தின் உதிர்வுகளாக....

'தொலைந்து போகும் எண்ணங்கள்' கவிதைத் தொகுப்பிலிருந்து வரும் ஒவ்வொரு கவித்துளிகளும் என் பிஞ்சு நெஞ்சாகிய ஒலி நாடாக்களில் பதியப்பட்ட சில சம்பவங்களின் எதிரொலிகள் என்றால் மிகையாகாது. பல இடங்களில் அவை எதிரொலிக்கும் ஓசை தவழ்ந்து திரிகின்றது. அத்தோடு மனக் குமைச்சல்கள், குழைந்து போன எண்ணங்கள், படைப்பின் பின்னணிகள் போன்ற பல்வேறு அம்சங்களும் ஆங்காங்கே அடக்கமாகவும் ஆவேசமாகவும் அறையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நான் கஷ்டப்பட்ட ஒவ்வொரு கணத்திலும் அடிமனதிலிருந்து நரம்புகள் வழியாக வந்த உதிரங்கள் மூலம் வெளியாகிய வியர்வைத் துளிகளிலிருந்து சொட்டிய கவிதைகள் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எனது கன்னிக் கவிதைத் தொகுப்புக்கு நான் மேற்கொண்ட முயற்சியை மாபெரும் உள்ளம் படைத்த கவிஞர்களும் அன்பான வாசகர்களும் தட்டிக்கழித்து விடாது என் கவி அலைவரிசைகள் தொடர்ந்தும் பணியாற்ற உதவிக்கரம் நீட்டுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன். அத்தோடு வாழ்த்துக்களை விட, என்னை வழிப்படுத்தும் விமர்சனங்களையே விழிகள் காணத் தவிக்கின்றது.

என் பேனா உங்கள் விமர்சனங்களை என்முகவரியோடு மட்டுமே பதிலெழுத காத்துக் கொண்டிருக்கிறது. என்னை கவிதையுலகத்துக்கு அழைத்துச் செல்லவிருக்கும் உங்கள் விமர்சனங்கள் விபரீதமற்றவையாக இருக்குமென எதிர்பார்த்து

நிற்பதோடு எனது மற்றைய தொகுப்பு விரைவில் வெளிவர வழிசமைப்பீர்கள் எனவும் எதிர்பார்க்கிறேன்.


எனது ஒவ்வொரு அசைவின் போதும் சிப்பிகளாகிய என் உள்ளத்திலிருந்து வெடித்துச் சிதறிய முத்துக்களின் பிரதிபலிப்புத்தான் இக்கவிதைத்தொகுப்பு. அப்போது பல நூற்றுக்கணக்கான கவிதைகள் நூலுருப்பெற அச்சகங்களின் வழிதெரியாமல் இருந்த போது, எங்கள் கல்லூரிச் சமூகத்தினரால் வழிகாணவென கொடுக்கப்பட்ட வெள்ளைப் பிரம்புதான் என் வாழ்வில் நான் பெற்ற மிகப் பெரிய வெகுமதி என்பேன்.

அத்தோடு பல்வேறு வகையிலும் எனக்கு ஊக்கமளித்து வாழ்த்துரை தந்துதவிய வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி மதிப்புக்குரிய திரு.க.பேர்ணாட், விரிவுரையாளர், திரு.ந.பார்த்தீபன், சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் S. சஹாப்தீன் ஆகியோர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளியீட்டினை வெளியீடு செய்வதற்கு முன்வந்த தமிழ் மன்றத்தினருக்கும், மன்றத் தலைவர் அவர்களுக்கும் இஸ்லாமிய மன்றத்தினருக்கும் என் அன்பார்ந்த நண்பர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு எல்லாவற்றுக்கும் மேலாக எனது முயற்சியை திருவினையாக்கிய இறைவனுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நன்றி

M.Y.இமாம்தீன்
637. அரபா நகர்
தம்பலகமம்.

## எனது கவிதை



அச்சில் ஏறாத – அவை
தொட்டி நழுவிய மீனாய்
தத்தளித்துக் கொண்டிருக்கின்றன
தார்ப்பரியத்தை
புரிந்து கொள்வார் உண்டோ?

## சமூகமே



உருவாக்க வேண்டியவனை
உருக்குலைக்கத்தெரிந்த உனக்கு
ஏன் என்னை கருவில்
அப்போதே
சிதைத்து விடத் தெரியவில்லை.

## தேச கீர்த்தி



நேர்த்தியான போக்கால்
கீர்த்தியுடன் திகழ்ந்து
தேச கீர்த்தியானாய்
நேசமான – எங்கள் பீடாதிபதியே!
நாளைய இவ்வுலகின்
அதிபதியாய் உங்கள் பாதங்கள்
அடியெடுத்து வைக்காதா?

## நண்பனுக்கு

அன்னைக்கு
அடுத்தபடியாக
ஆரம் சூடுவதென்றால்
உனக்குத்தான் சூடுவேன்
நீ எங்கே படிக்கப் போகிறாய்
எனக் கேட்டு என்னை
படைப்பாளியாக்கியதற்காக.


## அம்மா

**அம்மாவை விட்டு என்னால் பிரிந்திருக்க முடியாதபோது வெளிவந்த தாய்ப்பால் இவை..........**



பாலோடு சேர்த்து
எனக்குத்
தெரியாமல்
ஏனம்மா
பாசத்தை ஊட்டினாய்!
பிரிந்து வாழ முடியாமல் – நான்
அவஸ்தைப்படுவதற்காகவா?

## சமாதானம்



விலை போகாத வெண்புறாக்கள்
வேறு நிறந்தீட்டப்பட்டு
வேடிக்கை பார்க்கும்
வெளிநாட்டவர்களின்
காட்சியறைகளில்

## துப்பாக்கி



மனித உயிர்களைக்
குடிக்க
இலவசமாக நாட்டுக்குநாடு
இறக்குமதி செய்யப்படும்
உயிர் கொல்லி

## அறியாமை

மூக்கில்லாத
உனக்கு
கழுதையிடம் - ஏன்
கற்பூர வாசனை பற்றிய
கலந்துரையாடல்.

## பொறாமை

உரசப்பட்ட தீக்குச்சியின்
உடல் உருகும் நிலை.

## அழகு



அழியாச் செல்வம் என நீ
நினைக்கும் புற்றுநோய்

## விடுதி

வெட்டிப் பேச்சென்றாலும்
கெட்டிக்காரர்களை பிரசவிக்கும் – அன்னை

## தவறுகள்


நீங்கள் இல்லாத எங்கள் வாழ்வில்
வெற்றியென்பது கிடையாது.

## பேச்சுவார்த்தை



வண்ணத்துப் பூச்சிகளை வேட்டையாட
ஆயுதங்களை பயன்படுத்தும் செயற்பாடு

## தூக்கம்



தூக்கம் இனிமையானது, சுகமானது என்பார்கள் ஆனால் நான் இவ்வாறு கூறுவேன்

துக்கத்தை மறந்து
தூய்மையான
சுதந்திர
உலகத்திற்குள்
உடலில்லாமல்
அழைத்துச் செல்லும்
அரைவாசி மரணம்.

## வியர்வை

ஒரு சாண் வயிற்றுக்காய்
உடல் சிந்தும் பனித்துளிகள்.

## கல்லறை

ஓ! மனிதா!
நீ! உன் ஆணவத்தால், அங்கே
கட்டப்பட்ட கல்லறைகளை
கண்டு கொள்ளாமல்
கடந்து செல்லும் போது கூட
அது உன் அறியாமை கண்டு
மெதுவாக சிரித்துக் கொள்கிறது.

## வலி



கண்மணியே!
பிரியாத ஆசைகளோடு
பிரியமுடன் உன்னைவிட்டு
பிரிந்து செல்ல
என் இதயவறைகள்
வலி தாங்கும் சுவர்களா?


அவை நொந்து வாடிவிழும் பூக்கள்
அன்பே!
என் இதயத்திற்குள்
சீனச் சுவரொன்றை கட்டிவிட்டு
என்னை
வலிக்கவிடு
கொஞ்சமாவது
தாங்கிக் கொள்ள.

## நபி வழியில் ஆசிரியர்களாக...

நபியே நிலைத்திருக்கிறோம் நாங்கள்
உம் உம்மத்தினராக!
எம் சமூகத்திற்குள்
உண்மையை நிலை நிறுத்தி
சத்தியத்தைத் தூணாக்கி
துவளும் இவ்வுலகில்
வந்தீர் நீர் எமக்கு தூதுவராக

மானுஷம் என்பதை எமக்களித்து
அந்நிய ஆண் பெண்ணோடு
கண்ணியமாய் பழகிக் கொள்ள
கற்றுத் தந்தீர் நீர் எமக்கு
மானிட வேடம் போட்டு
மானம் கெட்டுத்திரியும்
இம்மாந்தர்கள் சிலர் மூர்க்கத்தனமாக
உன் சொல் கேட்கவில்லை

இந்தக் கல்லூரி வாழ்க்கையில்
இனிதே வழிகாட்டிய உமது வாக்குகளை
என்றும் செயலில் கொணர்ந்திடவே
எங்கள் உள்ளம் தவிக்கிறது.
தலைமைக்குக் கட்டுப்பட்டு
தாயெனப் போற்றியதை
தாயகம் சிறக்க ஓங்கி ஒலிக்க
தம்முயிர் தந்துதவுவோம்
உத்தம நபியாம்
உங்கள் வழியில்
புறப்படுகின்றோம் – இன்றே
பூரணமான வாழ்க்கையை நோக்கி



**ஆசிரியர்களாக!**

## பத்திரிகைச் செய்தி



உலகம் உருளுகிறதா?
புரளுகிறதா?

உண்மையில் அது
எரிகிறது....

அணைக்கவுள்ளதோ
அணுகுண்டு
எரிக்கவுள்ளதோ
எறிகணை - ஆதலால்
உலகமே எரிகிறது.

பால்குடிப் பிள்ளைகளோடு
பலஸ்தீனம் எரிகிறது
ஈவிரக்கமற்ற வல்லரசால்
ஈரானீராக் எரிகிறது.

ஆணவம் கொண்டோரால்
ஆப்கானிஸ்தான் எரிகிறது.
எரிகிறது... எரிகிறது...
எரிந்து கொண்டேயிருக்கிறது.

வைத்த காலை
வீரியமாக தூக்கப்பயம்
வெடித்து விடுமென்று

ஏறிய மேடையில்
தைரியமாகப் பேச பயம்
உயிரைக் குடித்து விடுமென்று

பேனைகளுக்குள் ரவைகள்
ஆதலால் எழுதவும் பயம் - நிருபர்களுக்கு
அன்று புதைக்கப்பட்ட
குண்டுகள்
இலகு கருதி
இன்று
விண்வெளியில் தூக்கிக் கட்டப்படுகிறது.

கடலுக்கடியில் அணுவாயுதம்
நிலாவெளியில் என்னவாயுதமோ?

இவற்றை பொன்னெழுத்துக்களால்
பொறித்தால்
பொருளாதார தடையென்பர்.

வாயால் குமுறினால்
குவாண்டனாமோ சிறை என்பர்.


அறிவாளிகளின் பேச்சு மேடைக்கு
முட்டாள்கள் தவம்.

அவர்களே எதிர்கால
நோபல் பரிசுக்குரியவர் என
பத்திரிகைகளில் விளம்பரம்
இல்லாவிட்டால், - நாளை
"ஊடகவியலாளர் கொலை" என்ற
மற்றுமொரு பத்திரிகைச் செய்தி

இறைவா!
ஓயாமல் சரிகிறதே!
ஆயிரம் பிரச்சினைகள்
எங்களது தலைகளில்

புரியாத புதிர்கள்
இவைதானா?
எங்கே பதிலை காணவில்லை
அங்கேயும் அணுகுண்டா...?

# தொலைந்து போகும் எண்ணங்கள்



கண்கள் காணக்கூடாத சில காட்சிகள் வீதியோரங்களில் மலிந்து கிடந்த போது வெளியாகிய வலியின் வடிவங்கள் இவை.....

காலை நேரமது
ராத்திரிகளின் விளிம்புவரை
சுகங்கண்டு விழித்தெழுந்த நெஞ்சங்கள் – இனி
பணி செய்ய
பயணிக்க ஆரம்பித்துவிட்டன.

வியர்வையைச் செலவழித்து – வாழ்வில்
வீறுநடை போடவெண்ணி
வீதியோரத்தால்
தங்கக்கரம் வீசிச் செல்வதோ அழகுதான்.

திரும்பி வருவீர் – என்ற
நம்பிக்கை
குடியிருக்கின்றன வீடுகளில்
குழந்தைகளின் தவிப்பிற்காக....

பயணிகள் பட்டியலில்
அம்மா, அப்பா, அண்ணா, அக்கா...
என பலபேர் – வீட்டாருக்கு
சொந்தங்கள் என்று சொல்லிக் கொள்ள.

சோக ராகங்களில் சந்தோஷ கீதங்கள்
பாடும்
பாதங்கள் – அவைகள்

பசி போக்கவென
பாதைகளில்
படையெடுப்புப் போல
செல்லும் போதே
பரிதவிக்கும் எங்கள் கண்களில்
உதிரத்துளிகள் சொட்டுகிறதம்மா.

அதோ!
அங்கே ஒரு சத்தம்! என்ன நடந்ததோ!

பாவம் ஏதும் கண்டிராத
அப்பாவி உயிர்கள் அவை
அவர்களுக்குத் தெரியுமா?
எழுதப்படாத தலைவிதி

பரிதவிக்க பரிதவிக்க
நடு வீதியில்
உயிர் பறிபோகிறதே!

அறை கூவாமல் முதுகிலடித்து
அப்பாவிகளின் உயிர் பறிப்பை – அந்த
அசுரப் பாவிகள்
காணத் துடிப்பதேன்?

மனித உயிர்களைக் குடிக்கும்
உதிரவுண்ணிகள் நீங்கள் தானா?

அறியாமையின் அறிஞர்களே
உடலிலுள்ள
கிளைகள் ஒவ்வொன்றும்
கிளைமோரால் தாக்கப்பட்டு
சிதைக்கப்படுவதற்கு
சந்தையில் வாங்கப்பட்ட
கைப்பொம்மைகளா? அவர்கள்

அவர்களுக்காக எத்தனை
இளம் பிஞ்சு உள்ளங்கள்
கதறிக் கதறி அழும் ஓசை – உங்கள்
ஈரமில்லா நெஞ்சில்
தண்ணீர் வார்க்கவில்லையா?

அவர்களுக்காக துடிதுடிக்கும்
ஒவ்வொரு

உயிர்களுக்கும்
ஆறுதலும் அஞ்சலியும்தான்
உங்களால் கூறமுடியும்
அதுதான் இலவசமானதே!

செய்த குற்றம்
கண்டு கொள்ளாமல் இருக்கும்
மாமனிதா!

இறைவன் படைப்பில்
அகால மரணம் போகும்
ஒவ்வொரு உயிருக்கும்
ஐம்பதாயிரம் தான் –உன்
பெறுமதியா?

உயிருக்கு விலை பேசத்தெரிந்த
உனக்கு – ஏன்
உன்னுயிரை துச்சமாக நினைக்க மனம் வரவில்லை.

எம்மிருவரினது இரத்தத்திலும்
உனது இரத்தத்தை
இனங்காண முடியாத
உனக்கும் – எனக்கும்
என்ன வித்தியாசம்?

இறுதியாக ஒன்று!
எங்கள்
தலைகள்
தரைகளில் முட்டிவிட்டன.
உங்கள் குட்டுகளுக்கு – மேலும்
குனியமுடியாமல்
என்பதை புரிந்து கொள்.

# ஒரு சுவண்டுக்குருவியின் குமுறல்



**1. அறிமுகம்**

ஊமையாய் ஒருவன்
தெருவில்
உட்காரும் சப்தம்
ஊரெங்கும் நிசப்தம்


ஜன்னல்கள் மூடப்பட்ட
முகபாவனை
தெருவெங்கும்
நாய்களின் ஊளை
உடல் சிலிர்க்கும் காற்று

மூடப்பட்ட முக ஜன்னல்களை
திறந்து வைக்கும் - எனது
குருட்டு முயற்சி
அவனருகே நான்

**2. கேள்விக்கணை**

கேட்கப்பட்ட சில
கேள்விக் கணைகள்
சிறிது நேரத்தில்
சிதறுண்டு போகிறது
வீசப்பட்ட சூறாவளி
விடைகளால்

**3. விடை, மனநிலை**



உணர்வில்லாத சில பருவங்கள்
உருண்டோடிய பிறகு
உணர்விக்கவென்றே
வந்த பிரச்சினைகள்
வாசற்படியோரம் நின்றுவிடவில்லை.
நிலையான வாழ்க்கைக்குள் நுழைந்து
நிலைகெட்ட பேறுகளோடு
அவனை சீண்டிப் பார்த்திருக்கிறது
சில காலம்
வந்துவிட்ட பாதையை
திரும்பிப் பாராத நதி நீர்போல்
தாண்டிவிட்ட பாதையை
பார்க்கத் தவிக்கும்
அவனுள்ளம்.

**4. ஊர்**

செல்வச் செழிப்பு
'செல்வநகர்' ஊரின் பெயர்
சொந்தமாய் இல்லத்தோடு - நல்ல உள்ளமும்
சொத்து சுகம் எல்லாம்
சோலை வனத்தில்
பாடித்திரியும் பாசக்குயில்கள் - யாவும்
ஒரு கூண்டில் - ஒற்றுமையாக!

**5. சகோதரர்களின் இழப்பு**



காக்காக் கூண்டுக்கு வீசப்பட்ட
கல்லுக்குத் தெரியுமா?
பாசக் குயில்கள் உண்டென்று


வீசப்பட்ட அக்கல்லில்
வீணாக - குஞ்சிரண்டு

விண்ணைச் சேர
வயிற்றில் கல்லைக்கட்டிக் கொண்டு
வாயும் வயிறுமாக இருந்த – அன்னையால்
பிரசவிக்கப்பட்ட
அவன்தான் –அந்த
வாய் பேசத் தெரியா ஊமை
தெருவில் பல்லவி தெரியாப் பாடகனாக

**6. ஊர்விட்டு ஊர் நகர்வு**

உயிர் தப்பிப் பிழைத்த தன்னவரை
உறவென்று சொல்லிக் கொண்டு
ஊரைவிட்டு
உயிர்வாழ வென்றெண்ணி – வந்த
தாய்ப்பறவையது
தயங்காத உள்ளத்தோடு.

**7. புதுமனை**



குடிக்கத் தண்ணீர் ஆற்றில்,
குளத்தில் மீன்,
குற்றரிசி அத்தனையோடும், புசிக்க உணவு
குற்றம் பேசுவோர் ஒரு புறம்,
குடிசை மறுபுறம்,
அதுவே எங்கள் அந்தப்புரம்.

அம்மாவின் அயராத ஊக்கம்,
அப்பாவின் குளிராத உணவு,

ஊட்டிவிட பெண்குஞ்சிரண்டு
உண்டுவிட்டு - மடியில்
உறக்கம் கொள்ள
உண்டொரு ஆண் குஞ்சு

**8. கண்ணீரும் எழுச்சியும்**

உறங்கிய விழிகளில்
விழுந்த கண்ணீர்த் துளிகள் தான்
கண்களைத் திறந்துவிட்டது.
கஷ்டத்தை உணர்த்திவிட்டது.
காலத்தை வெல்லச் சொன்னது.
காவியம் படைக்கச் சொன்னது.
அரிவாளும் அரிசியும்
கோடரியும் விறகும் - கையில்
பேனாவும் கொப்பியும்.

**9. மறுமலர்ச்சி**




ஊர் நடுவே கனி மரம்
பறித்துப் போக பலபேர்
தொலைந்துவிட்ட புதையல்
கிடைத்தாற் போல் சந்தோஷம்

**10. பிரிவும் விரிவும்**

அத்தனையும் கிடைத்திடவே
குஞ்சிரண்டும்

பருந்திரண்டின் கையில் சிக்கி
பரிதவித்த அக்கதையை
பாசம் இழக்கா என் நெஞ்சு
ஒரு போதும் சொல்லி இன்புறா
கண்ணிரண்டில் பட்டவலி
காயமேதுமில்லாமலே
கல்விக்கு கரம் நீட்டி
நம்பியரோடு நடைபோட
நம்பிக்கையோடு சேர்ந்து
சங்கமிக்கும் நதியானது.

## 11. தன்னம்பிக்கை



இந்நதிப்படுக்கையில் இருப்பது
நீரல்ல
நீராகிய நெருப்பு
இதில் உரசுவது காற்றல்ல
காற்றாலாகிய புயல்
அசைப்பது அலையல்ல
அலை போன்ற பூகம்பம் - அவன்தான்
அந்த பேசத் தெரிந்த ஊமை
வீதியோரம் பாடத் தெரியாப் பாடகனாக

## 12. முயற்சியால் கிடைத்த வெற்றிக்குப் பின்னால்

பணத்துக்கு பின்னால் வரும் பிசாசுக்கூட்டங்கள்
மாப்பிள்ளை கேட்டுவரும்

மாமாக் கூட்டங்கள்
நண்பனாக முண்டியடிக்கும்
முட்டாள்கள் என

பலபேரை
பதினாறில் கண்டபோது
கண்களுக்குத்தான் தெரிந்ததே – தவிர
மனசுக்குப் புரியவில்லை
புரியாத அவை
புதிருமல்ல
விலை மலிந்து
சந்தைக்கு வந்த கதையது.

**13. நினைத்தது கிடைத்தும் நிம்மதியில்லா வாழ்வு**

பன்னிரு காலம் வந்தும் – தெளித்த
பன்னீர் வாசனை காற்றில்
பறப்பது போன்ற வாழ்வு
இற்றைவரை

இருட்டில் கலைக்கப்பட்ட
குருட்டுக் கிளிபோல
நிலை தடுமாறி
நிரந்தர விடிவை நோக்கி
நிம்மதியின்
வடிவினைப் பார்க்க
ஏங்கித் தவிக்கும் அவனுள்ளத்தை
தண்ணீர் கொண்டு – எவர்தான்
தாகம் தீர்ப்பார்.

அவன் தான் பேசத் தெரிந்த ஊமை
வீதியோரம்
பாடத்தெரியாப் பாடகனாக.

## தட்டுவது கேட்கிறதா?

எண்ணெய் ஊற்றி
எரியவிட்ட என் காதலை
ஏன் தண்ணீரிட்டு
அணைய வைக்கிறாய்?


சிறுவயதில் விளையாடிய
பொம்மை விளையாட்டை
ஞாபகப்படுத்த
என்னில் மீட்டற் பயிற்சி செய்கிறாயா?

கண்ணீர்விடும் எனது கண்களில்
அணை கட்டுவார்
யாருமில்லை உன்னைத் தவிர

அன்பே! நான்
கரைசேர நினைத்தேன்
கரையே நீயாகையால் - தண்ணீருக்குள்
கரை தேடித் தவிக்கிறேன்.

தட்டினால் திறக்கப்படும் என்றார்களே
எனது அழுகுரல் ஓசை
உன் இதயக்கதவுகளை இன்னும்
தட்டவில்லையா?
அன்பே! அது
எப்போது திறக்கப்படும்.

## எதிர்பார்ப்பு



எட்டிப்பார்த்த
எனது உணர்ச்சிகளை
தட்டிவிட்டுச் சென்றாய்

உன்னை துரத்திக் கொண்டேயிருந்த
என்னைக்கண்டு

தூறலிட்ட அந்தக் கார்மேகம்
உன் வருகை பார்த்து
தன்னை அர்ப்பணித்துக் கொண்டது.


மீண்டும் நீ வரும் வரை
மேகம் சிந்தும் தூறல்கள்
சாரல்களோடு
விடிவின் விடியல்களாக – உன்
வருகைக்காக
விழிவைத்து
விழித்திருக்கிறது.

## வானவில்



ஓ! வானமே!
உனது மார்பகங்களின் அழகை மறைக்க
வானவில்லைச் சூடிறாவிட்டால்
இவ்வர்ணமயமான ஆடையுலகம்
எங்களுக்குத் தோண்டிராது.

## கண்கள்



காதலர்களின் முதற்தர
தொடர்புசாதனம்

கவிஞர்களின் முதற்தர
சஞ்சரிப்பு

சிற்பிகளின் முதற்தர
அரியாசனம்

குழந்தைகளின் முதற்தர
தள்ளுவண்டி

நண்பர்களின் முதற்தர
குழூஉக்குறி

நாட்டியத்தின் முதற்தர
நாயகன்

நடிகனின் முதற்தர
ஜோசியன்

கள்வனின் முதற்தர
சைகை

பெண்களின் முதற்தர
நட்சத்திரம்

ஆணின் முதற்தர
அட்சய பாத்திரம்

# இருளில் ஒரு வெளிச்சம்

நான் நண்பர்களோடு சேர்ந்து சந்தோசமான உலகத்தைக் கண்டபோது எனது உயர்தரமான வாழ்வின் பாதைகள் அடைக்கப்பட்டதை உணர்ந்து கொண்டது உள்ளம், அப்போது வெடித்த எரிமலையின் குழம்புகள் தான் இவை

சொன்னான் ஒருவன்
வௌவாலுக்கு வாழ்க்கைப்பட்டால்
தொங்கித்தானே ஆக வேண்டுமென்று

உண்மை! ஆனால்
அந்த யுகம்,
சேர்ந்தவனோ மீன் வியாபாரி
வீசியதோ துர்நாற்றம்

இந்த யுகம்,
சேர்ந்தவனோ மலர் வியாபாரி
வருவதோ நறுமணம்

ஆகவே ,
எழுந்துவிட்டோம்
படைப்பதற்கு

சாக்கடைப் பேச்சுக்கு
தலைசாய்த்த – இந்நெஞ்சுகளை
சாகச ஒளிக்குள் வசப்படுத்த
எழுந்துவிட்டோம்.

ஓ! கல்லூரியே! இளம் படையணி ஒன்று
உன்னை வாழ்த்தியுயர்த்த வந்துள்ளது.

சுடர்விட்டெரியும் சூழ்நிலைத் தீ
எங்களை
சுற்றிச் சுற்றி சுட்டெரித்தது.

சுகம் கொடுக்க
இடையே வந்துவிட்டாய்
சூன்யமற்ற அறிவோடு
வாழ்த்துகிறோம் - உன்னை
வளம் பெற


வவுனியா
வாசஸ்தலத்தின் சிரசு நீ
இமயச் சிகரம் வரை செல்ல
எதிர்காலம் உன்னை எதிர்பார்க்கும்

நாங்களும்
அடியெடுத்து வைத்துவிட்டோம்
இனி சுவடுகளை நிறுத்த விருப்பமில்லை

குறிக்கோளை
தரிசிக்காமல்
இத்தரணியில்
எங்கள் பயணத்தை
நிறுத்தப் போவதுமில்லை

நாங்கள் புது யுகத்தின்
புதுமைகள்
சொல்லுங்கள்
நாங்கள் போகும் பாதைகள்
எங்கே இருக்கிறது?

## சூரியன்



சூரியனை பலபேரும் பலவாறு பலவிதத்தில்
பார்த்தார்கள் ஆனால் நான் இவ்வாறுதான் பார்த்தேன்....

பூமியில் தனது கைகளை நீட்டி
இருளைப்பிடித்து சிறையிலடைக்க
முயற்சித்துக் கொண்டிருக்கும் நாடோடி (சூரியன்)

## இருட்டு



நான் சூரியனுக்கு அருகிலிருந்து பார்த்தபோது
எனக்கு இருட்டு இவ்வாறுதான் தெரிந்தது...

சூரியனுக்குப் பயந்து
சுவட்டிலேயே ஓடிக் கொண்டிருக்கும்
நெடுந்தூர ஓட்டவீரன். (இருட்டு)

## வயது

சேமிக்க முடிந்த அவைகள்
செலவளிக்க முடியாத பொற்காசுகள்



**திரு.எம்.வை.இமாம்தீன்**
**637, அரபாநகர்,**
**தம்பலகமம்,**
**திருகோணமலை.**

கவிதை படைக்கும் ஆற்றல் இமாமுக்கு இறைவன் அளித்த கொடை. அவர் அதனை வெளிப்படுத்த எமது கல்வியியற் கல்லூரியை ஒரு களமாகப் பயன்படுத்த எடுத்திருக்கும் முயற்சியானது பாராட்டுக் குரியதும், மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியானதும், வாய்ப்பைச் சரிவர பயன்படுத்த எடுத்துக் கொள்ளும் முயற்சியுமாகும்.

- பீடாதிபதி திரு.சு.பேர்ணாட்-

கவிதைத்துவம், உணர்வு நலம், மொழிச்சிறப்பு என நம்பிக்கையூட்டும் கவிஞனாகக் கூடிய சாயல் தெரியும் இமாமின் தொலைந்துபோகும் எண்ணங்கள் என்ற கவிதைத் தொகுதியிலுள்ள கவிதைகள் தொலைந்து போகாதன என்று கூற முடியும்.

- தமிழ்மன்ற போஷகர் திரு.ந.பார்த்தீபன்-

உணர்வுகளுக்கு வடிவம் கொடுத்திருக்கும் கவிஞரின் இக்கன்னி முயற்சியை மனமார வாழ்த்துவதோடு தொடர்ந்தும் இவரின் இவ்வாறான முயற்சிகள் பிறந்து புகழ் பெற்ற கவிஞர்களுள் ஒருவராகவும், உலகம் போற்றக் கூடியவராகவும் திகழ வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

- இஸ்லாமிய மன்றப் போஷகர் திரு.எஸ்.சஹாப்தீன்-

பல திறமைகளையும் பொறுப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இமாமோடு சேர்ந்திருக்கும் எனது கல்லூரிக்காலம் பெரும் மகிழ்ச்சியை தந்தாலும், அது முற்றுப்பெற்று விடுமோ? என்ற அச்சமும் உள்ளே உருண்டு கொண்டுதான் இருக்கிறது.

- தமிழ் மன்ற தலைவர், திரு.கே.ஜே.கிரிஷேந்திரா-